08–05–2020

**மத்திய அரசின் 2020 ஆண்டு வரைவு மின்சார சட்டத்திருத்தம் குறித்து மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களால் வெளியிடப்படும் அறிக்கை**

மத்திய அரசு 17.04.2020 அறிவிப்பின் வாயிலாக 2020 ஆம் ஆண்டு வரைவு மின்சார சட்டத்திருத்தம் குறித்த அறிவிப்பு வெளியிட்டு, அனைத்து மாநிலம் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு மின்சார சட்டத்திருத்தத்திலுள்ள பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் முக்கிய சரத்துக்களை நீக்க மத்திய அரசை வலியுறுத்த அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே, மின்சார வாரியத்தை தனியார்மயமாக்க (Separation of Carriage and Content) எடுத்த நடவடிக்கைக்கு மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.12.2014 அன்று எழுதிய கடிதத்தில் அதனை கைவிடுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வரைவு மின்சார சட்டத்திருத்தத்தில் கூறப்பட்ட முக்கிய சரத்துக்களான நடுத்தர மக்கள் பெறும் மானிய விலை மின்சாரம் மற்றும் விவசாயிகள் பெறும் இலவச மின்சாரத்திற்கான மானியத்தை பயனீட்டாளர்களின் வங்கி கணக்கிற்கு அந்தந்த மாநில அரசு நேரடியாக செலுத்துதல் மற்றும் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மத்திய அரசு நியமித்த குழுவின் மூலமாக தேர்ந்தெடுத்தல் போன்ற மாநிலத்தின் உரிமைகளை இழக்க நேரிடும் வரைவு திருத்தங்களை கைவிடுமாறு வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.11.2018 அன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தற்பொழுது, மத்திய அரசு 2020 ஆம் ஆண்டு வரைவு மின்சார சட்டத்திருத்தம் மூலமாக, மேற்கூறிய முக்கிய சரத்துக்கள் மட்டுமல்லாது புதிய திருத்தமாக மின்சார விநியோகத்தை மேற்கொள்ள தனியார் துணை விநியோக

உரிமம்தாரர் (Sub-distribution licensee) மற்றும் உரிமம் பெறுபவர் (Franchisee) மூலமாக மேற்கொள்ளுதல் மற்றும் மாநில ஒழுங்குமுறை ஆணையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட மின்கொள்முதல், மின் விற்பனை செய்யும் மின் உற்பத்தியாளர்கள் மற்றும் உரிமம்தாரர்களுக்கு இடையேயான ஒப்பந்த சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் ஆகியவற்றை மத்திய அரசினால் புதிதாக அமைக்கப்படவுள்ள மின் ஒப்பந்த அமலாக்க ஆணையத்திற்கு (Electricity Contract Enforcement Authority) மாற்றுதல் போன்ற சரத்துக்களை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனைத்து வரைவு திருத்தங்களும், பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன்களுக்கு எதிராக அமைந்துள்ளதால் இந்த வரைவு மின்சார, சட்டத்திருத்தத்தை மத்திய அரசு கைவிட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தங்களது ஆட்சி காலத்தில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை காக்கும் ஒரு நல்லரசாகவே ஆட்சி புரிந்து வந்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் நடக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாரின் அரசும் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கைகளையும் அனுமதிக்காது. எனவே, தற்பொழுது மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டு வரைவு மின்சார சட்டத்திருத்தத்தினை கைவிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

எந்த சூழ்நிலையிலும் தமிழக மக்களுக்கு பாதகமான எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது என்ற மாண்புமிகு அம்மாவின் கொள்கையினை கடைபிடிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மேற்கூறிய வரைவு மின்சார சட்டத்திருத்தம் அமலாக்கத்திற்கு வராதவண்ணம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார்.